மாகாண வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தக, வீடமைப்பு நிர்மாண, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு - மேல் மாகாணம்

**வீதிகளுக்கிடையிலான பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை (மேல் மாகாணம்)**

# பதவி வெற்றிடம்

இவ் அதிகார சபையில் வெற்றிடமாகவுள்ள கீழே குறிப்பிடப்படும் பதவிகளுக்காக நிரந்தர அடிப்படையில் சேர்த்துக்கொள்ளும் முகமாக தகைமையுடைய இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| பதவி | வெற்றிட எண்ணிக்கை | வருடாந்த சம்பள அளவு (ரூ) | வயது 2025.03.20 ம் திகதிக்கு (வருடங்கள்) |
|---|---|---|---|
| 01. பிரதேச முகாமையாளர் MM 1-1 | 02 | 53,175+10X1375+15x1910+95,575 | 22 இற்கு குறையாத 45 இற்கு மேற்படாத |
| 02. உள்ளக கணக்காய்வாளர் MM 1-1 | 01 | 53,175+10X1375+15x1910+95,575 | |
| 03. நிர்வாக அதிகாரி (ஓட்டம்) JM 1-1 | 01 | 42,600+10X755+18x1135+70,580 | |

**சேர்த்துக்கொள்வதற்கான தகைமைகள்**

## 01. பிரதேச முகாமையாளர் MM 1-1: வெற்றிடம் 02

**வெளி விண்ணப்பதாரிகள்**

வர்த்தகம்/அரச நிர்வாகம், போக்குவரத்து மற்றும் திட்டமிடல் சேவை, மனிதவள முகாமைத்துவம் (HRM), வணிகம், பொறியியல் இற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (U.G.C) மூலம் அங்கீகரிக்கப்பட்ட பட்டத்தை பெற்றிருத்தல் மற்றும் பட்டத்தைப் பெற்றுக்கொண்ட பின்னர் கூட்டுத்தாபனம், சபை அல்லது வணிக நிறுவனமொன்றில் குறித்த துறையில் குறைந்தபட்சம் மூன்று வருட (3) சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல்

**கவனிக்கவும் :**

மக்கள் தொடர்பு மற்றும் போக்குவரத்து சேவை பற்றி பெற்றுள்ள விசேட திறமை கட்டாயமானது.

**உள்ளக விண்ணப்பதாரிகள்**

கனிஷ்ட முகாமைத்துவ வகுதியின் 1ம் தரத்தில் குறித்த துறைக்குச் சொந்தமான பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து வருட (5) திருப்திகரமான சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**கவனிக்கவும் :**

துறைசார் விடயங்கள் பற்றிய தகைமைக்கு முன்னரான மற்றும் சேவை அனுபவம் பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் விடயத்தில் முன்னுரிமை வழங்கப்படும்.

## 02. உள்ளக கணக்காய்வாளர் MM 1-1: வெற்றிடம் 01

**வெளி விண்ணப்பதாரிகள் (கீழ்க்காணும் i அல்லது ii அல்லது iii இல் காணப்படும் தகைமைகளுடன் iv இல் காணப்படும் சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல்)**

i. வர்த்தகம்/அரச நிர்வாகம், கணக்கியல், முகாமைத்துவம் அல்லது வணிகத்திற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (U.G.C) மூலம் வழங்கப்படும் ஆரம்ப பட்டத்தை பெற்றிருத்தல்

**அல்லது**

ii. ICASL இடை நிலை சான்றிதழ்/செமஸ்டர் ii சான்றிதழ்/CIMA அல்லது ACCA இல் மூன்றாம் பாகம் (Part III) சித்தியடைந்திருத்தல்

**அல்லது**

iii இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியினால் வழங்கப்படும் கணக்கியலுக்கான உயர் தேசிய டிப்ளோமா (HNDA) சித்தியடைந்திருத்தல்

**அத்துடன்**

iv மேற்படி தகைமைகளைப் பெற்றுக்கொண்ட பின்னர் கூட்டுத்தாபனம், சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட வணிக நிறுவனமொன்றில் கணக்கியல்/கணக்காய்வு துறையில் பெற்றுக்கொண்ட மூன்று (3) வருட சேவை அனுபவத்தை பெற்றிருத்தல்

**உள்ளக விண்ணப்பதாரிகள்**

கனிஷ்ட முகாமைத்துவ வகுதியின் (கணக்கியல்/கணக்காய்வு அதிகாரி) 1ம் தரத்திலான பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து வருட (5) திருப்திகரமான சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

## 03. நிர்வாக அதிகாரி (ஓட்டம்) JM 1-1: வெற்றிடம் 01

**வெளி விண்ணப்பதாரிகள்**

வர்த்தகம்/அரச நிர்வாகம், வணிகம், போக்குவரத்து மற்றும் வழங்கல் சேவை, சிவில் பொறியியல், சனத்தொகையியல், முகாமைத்துவம் பற்றிய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (U.G.C) மூலம் வழங்கப்படும் ஆரம்ப பட்டத்தை பெற்றிருத்தல் மற்றும் பட்டம் பெற்றுக்கொண்ட பின்னர் அரச திணைக்களம், அரச கூட்டுத்தாபனம், சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட வணிக நிறுவனத்தில் குறைந்தபட்சம் ஒரு வருட (1) சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல்

**உள்ளக விண்ணப்பதாரிகள்**

முகாமைத்துவ உதவியாளர் வகுதியின் 1ம் தரத்தில் குறித்த துறைக்குச் சொந்தமான பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து வருட (5) திருப்திகரமான சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**சேர்த்துக்கொள்ளும் முறைமை:**

சகல ஆட்சேர்ப்பும் கட்டமைக்கப்பட்ட நேர்முகத்தேர்வின் பெறுபேறுகளின் அடிப்படையில் நடைபெறும்.

நேர்முகத்தேர்வில் புள்ளிகள் வழங்கப்படும் விதம் கீழ்க்காணுமாறு அமையும்

| தகவுத்திறன் | புள்ளிகள் |
|---|---|
| குறித்த மேலதிக அனுபவத்திற்காக | 30 |
| குறித்த மேலதிக தகைமைகளுக்காக | 30 |
| வேறு செயற்பாடுகள்/வெற்றிகள் | 15 |
| நேர்முகத்தேர்வில் செயற்பாட்டு மட்டம் | 25 |
| முழுப் புள்ளிகள் | 100 |

## நியமனத் தன்மை

இப்பதவி நிரந்தரமானது, ஓய்வூதியத்துடனானது, ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் பொறுப்பு நிதிக்கு உரித்துடையது.

## சேவை நிபந்தனைகள் மற்றும் பொது விதிமுறைகள்

**சகல விண்ணப்பதாரிகளும்,**

i. இலங்கை பிரஜையாக இருப்பதுடன் மேல் மாகாணத்திற்குள் குறைந்தபட்சம் மூன்று வருட (3) நிரந்தர பதிவை உறுதி செய்தல் வேண்டும்.

ii. பதவிக்கு ஒப்படைக்கப்படும் வேலைகளை முறையாக நிறைவேற்றுவது போலவே மேல் மாகாணத்திற்குள் எந்த சேவை நிலையத்திலும் சேவை செய்வதற்கு தேவையான உடல், உள தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

iii. சிறந்த நல்லொழுக்கம் உடையவராக இருத்தல் வேண்டும்.

iv. தேர்ந்தெடுக்கப்படும் வெளி விண்ணப்பதாரிகள் கடமையைப் பொறுப்பேற்ற தினம் முதல் 03 வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுத்தப்படுவதுடன் அரச சேவையில் தற்போது நிரந்தரமாக உள்ள விண்ணப்பதாரிகள் ஒருவருட சேவைப் பரிசீலனை காலத்திற்கு உட்படுத்தப்படுவர்

v. சகல ஊழியர்களும் ஊழியர் சேமலாப நிதிக்கு 8% பங்களிப்பு செய்தல் வேண்டும் அத்துடன் அதிகார சபையினால் 12% வைப்புச் செய்யப்படும். மேலும் ஊழியர் பொறுப்பு நிதிக்கு அதிகார சபையினால் 3% வைப்புச் செய்யப்படும்.

vi. இதற்கு மேலதிகமாக மாதாந்த வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு ரூ.17,800 மற்றும் சுற்றுநிருபத்தின் மூலம் அந்தந்த பதவிக்கு பொருத்தமான அனுமதிக்கப்பட்ட அனுகூலங்கள் கிடைக்கும்.

## விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டிய முறை

மேற்படி தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் தமது கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளை உறுதி செய்யும் சான்றிதழ்களின் புகைப்படப் பிரதி மற்றும் பதிவை உறுதிசெய்யும் கிராம சேவகர் சான்றிதழை தம்மால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்துடன் இணைத்து 2025.03.20 அல்லது அதற்கு முன்பு கிடைக்குமாறு கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்கள் உள்ளிடும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடுதல் வேண்டும்.

தற்போது அரச சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரிகள் தமது பிரிவுத் தலைமையூடாக விண்ணப்பித்தல் வேண்டும். பூர்த்தியற்ற விண்ணப்பங்கள் மற்றும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றதாக அறிவிக்கப்படமாட்டாது.

**காமினி ஜாசிங்க**

**தலைவர், மேல் மாகாண வீதிகளுக்கிடையிலான பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை,**

**இல. 89, "ரன்மகபாய" கடுவளை வீதி, பத்தரமுல்ல**

**2025.02.27**